இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சமூக கற்கைகள் துறை
சமூக விஞ்ஞானத்திற்கான சான்றிதழ் கற்கைநெறி , மட்டம் - 1
இறுதிப் பரீட்சை - 2008
இலங்கையின் நவீன வரலாறு - SSF 1301

காலம் - மூன்று (3) மணித்தியாலங்கள்

திகதி: 27.09.2008 நேரம்: மு.ப.09.30 – 12..30 வரை

ஐந்து (5) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஏதேனும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்க

ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்

பகுதி - 1

1. i. மறுமலர்ச்சியில் செல்வாக்கு செலுத்திய நான்கு காரணிகளை பெயரிடுக.
   ii 16ஆம் நூற்றாண்டின் ஐரோப்பாவில் தோன்றிய இரண்டு மத தலைவர்களினதும், இரண்டு விஞ்ஞானிகளினதும் பெயர்களைத் தருக.
   iii. மறுமலர்ச்சியின் விளைவுகளை விளக்குக.

2. i. போர்த்துக்கேயர் கிழக்கிற்கு வருவதற்கு செல்வாக்கு செலுத்திய காரணிகள் எவை?
   i. போர்த்துக்கேயர் வரும்பொழுது இலங்கையின் அரசியல் நிலைமையினை விளக்குக.
   ii. இலங்கையின் கரையோர மாகாணங்களை போர்த்துக்கேயர் ஆட்சி செய்தபோது ஏற்பட்ட சமூக,கலாச்சார விளைவுகளை விளக்குக.

3. i. 17ஆம் 18ஆம் நூற்றாண்டில் கண்டி இராச்சியத்தின் சமூக , பொருளாதார நிலைமையினை சுருக்கமாக விளக்குக.
   ii. "கண்டி இராச்சியத்தின் குழப்பமான அரசியல் நிலவரம் 1815ல் அதிகபிரயத்தனம் இல்லாமல் பிரித்தானியர் தமது கட்டுப்பாட்டின் கீழ் அதனை கொண்டுவர முடிந்தது." விளக்குக.

பகுதி - 2

4. 1818ஆம் ஆண்டு கலகத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

   i. கலகத்திற்கான காரணங்கள்

   ii. பிரித்தானியாரால் கலகம் அடக்கப்பட்டமை

   iii. கலகத்தின் விளைவுகள்

5. 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரையிலும் சுயதேவை பூர்த்தி பொருளாதாரமுறை மிகச் சிறப்பாக காணப்பட்டது. உதாரணங்களுடன் இம் முறையின் இயல்புகளை விளக்குக.

6. (அ) 1818 ஆம் ஆண்டு, 1848ஆம் ஆண்டு மலையகத்தில் ஏற்பட்ட கலகங்களுக்கான காரணங்களை விளக்குக.

   (ஆ) இக் கலகத்தின் விளைவாக பிரித்தானியர் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பிரதான நிர்வாக மாற்றங்களைக் குறிப்பிடுக

பகுதி - 3

7. "ரிரட்டை பொருளாதார முறை" என்றால் என்ன? பெருந்தோட்ட பொருளாதார அறிமுகத்தின் பின் இலங்கைப் பொருளாதாரம் எவ்வாறு இரட்டை பொருளாதார முறைக்கு மாறியதென்பதை குறிப்பிடுக.

8. பின்வருவனவற்றின் ஏதாவது மூன்றுக்கு (3) சிறுகுறிப்பு எழுதுக.

   (அ) அதிகாரி பிலிமத்தலாவ

   (ஆ) றொபேர்ட் பிறவுன்றிக்

   (இ) இலங்கையில் தானியவரி முறைமை

   (ஈ) தலையிடாமையும் இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியும்

   (உ) பயன்பாட்டு வாதம்

9. பிரித்தானியர் ஆட்சியில் புகையிரதம் மற்றும் வீதியின் அறிமுகம் இலங்கையின் பாரம்பரிய சமூக பொருளாதார முறையில் தாக்கத்தை ஏற்படுத்தியது.(சிறப்பாக மலையகப்பகுதியில்) உதாரணங்களுடன் விளக்குக.

(பதிப்புரிமையுடையது)

THE OPEN UNIVERSITY OF SRI LANKA
DEPARTMENT OF SOCIAL STUDIES
CERTIFICATE IN SOCIAL SCIENCES – LEVEL I (2007/2008)
FINAL EXAMINATION
SSF 1302 - GEOGRAPHY
REG. NO.: ——————

